(முழுப் பதிப்புரிமையுடையது)
(All rights reseved)



கொரோணா தொற்று நோய்

விசேட பாடசாலை விடுமுறை கால கல்வி வேலைத்திட்டம்- 2020

தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு

14 தலைப்புக்களின் கீழான நுண்ணறிவு செயலட்டை

இலக்கம் -3 எதிர்வுகூறல்

ஆக்கம்.

T.F.SHUHOOD.

ஆசிரிய ஆலோசகர்-

வலயக் கல்விப் பணிமனை - ஹம்பாந்தோட்டை.

071-182-6-181 – 077-635-8-304

அன்பின் சிறார்களே! உலகம் முழுவதும் பரவி வரும் கொரோணா வைரஸ் காரணமாக உங்களுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் வீட்டை விட்டு வெளியே செல்லாமல் பாதுகாப்பாக வீட்டில் இருந்தவாறே இங்கு காணப்படும் பயிற்சியையும் மேலதிக பயிற்சிகளையும் செய்து உங்கள் கல்விச் செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் படியும் வீணாக தொலைக்காட்சி பார்த்து காலத்தைக் கழிக்க வேண்டாம் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த தொகுப்பில் எதிர்வு கூறல் தொடர்பான விளக்கத்தையும் மாதிரி பயிற்சிகள் சிலவற்றையும் ஒன்று திரட்டி உங்கள் கைகளில் வழங்கியிருக்கின்றேன் அவைகளை நன்றாக விளங்கிக் கொண்டு இயலுமான வரையில் சுயமாக செய்து பயனடையும்படி கேட்டுக் கொள்கிறேன். - நன்றி



www.keou.lk

எதிர்வு கூறல்.

- இலங்கை கிரிக்கட் அணியைச் சேர்ந்த நான்கு வீரர்கள் ஏனைய நாடுகளுக்கு எதிராக பெற்ற ஓட்டங்களின் விபரம் பின்வருமாறு

வீரர்கள்	அவுஸ்திரேலிய	இந்தியா	வங்காளதேசம்	பாக்கிஸ்தான்	நியுசிலாந்து
டில்சான்	40	44	48	.....	56
சங்கக்கார	60	.....	80	90	100
மஹேல	110	115	.....	125	130
சாமர	25	.....	75	100	125

- மேற்படி அட்டவணைக்கு எற்ப

1) டில்சான் பாக்கிஸ்தானுக்கு எதிரான போட்டியில் எத்தனை ஓட்டங்கள் பெற்றிருப்பான்?
.....

2) சங்கக்கார இந்தியாவுக்கு எதிரான போட்டியில் எத்தனை ஓட்டங்கள் பெற்றிருப்பான்?
.....

3) மஹேல வங்காளதேசத்திற்கு எதிரான போட்டியில் எத்தனை ஓட்டங்கள் பெற்றிருப்பான்?
.....

4) சாமர இந்தியாவுக்கு எதிரான போட்டியில் எத்தனை ஓட்டங்கள் பெற்றிருப்பான்?.....

5) சங்கக்கார நியுசிலாந்துக்கு எதிரான போட்டியின் பின் இங்கிலாந்துடனான போட்டியில் விளையாடுவான் எனின் அப்போட்டியில் எத்தனை ஓட்டங்கள் பெறுவான்? .....

⁂ தோட்டமொன்றிலிருந்து பழ விற்பனைக் கடையொன்றுக்கு ஐந்து நாட்களில் அனுப்பிய பழங்களின் விபரம் பின்வருமாறு

பழங்கள்	1ம் நாள்	2ம் நாள்	3ம் நாள்	4ம் நாள்	5ம் நாள்
• மா	50	40	30	20	10
• பலா	16	24	.....	40	48
• அன்னாசி	56	61	66	71	76
• மாதுளை	12	15	18	21	24
• பப்பாசி	18	24	30	36	42

மேற்படி அட்டவணைக்கு ஏற்ப

1) 6ம் நாள் விற்பனைக்கு அனுப்பப்படாமல் இருக்கும் பழம் எதுவாக இருக்கலாம்? .....

2) 30 மாதுளம் பழங்கள் விற்பனைக்கு அனுப்பப்படும் நாள் எதுவாகலாம்? .....


3) 7ம் நாள் எத்தனை அன்னாசிப் பழங்கள் விற்பனைக்கு அனுப்பப்பட்டிருக்கும்?.....

www.kedu.lk

4) 1ம் நாளை விட இருமடங்கு பலாப் பழங்கள் 3ம் நாள் விற்பனைக்கு அனுப்பப்பட்டி ருப்பின் அதன் தொகை எவ்வளவாகும்?.....

5) 1ம் நாளை விட இருமடங்கு மாதுளைப் பழங்கள் விற்பனைக்கு அனுப்பப்படும் நாள் யாது?.....

⁂ விக்டரி நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட உடைகளின் விபரம் கீழே வரைபின் மூலம் காட்டப்பட்டுள்ளது. வரைபை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.



1) சனிக் கிழமை சட்டை உற்பத்தி எத்தனையாக இருக்கலாம் ?.....

2) ஞாயிற்றுக் கிழமை காற்சட்டை உற்பத்தி எத்தனையாக இருக்கலாம் ?.....

3) திங்கட் கிழமை சாரம் உற்பத்தி எத்தனையாக இருக்கலாம் ?.....

4) வரைபின் படி சனிக்கிழமை உற்பத்தி செய்யப்பட்ட மொத்த உடைகள் எத்தனையாக இருக்கலாம் ?.....

5) சனி , ஞாயிறு , திங்கள் ஆகிய நாட்களில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த காற்சட்டைகள் எத்தனையாக இருக்கலாம் ?.....

⁂ பூக்கள் ஏற்றுமதி செய்யும் நிறுவனமொன்றினால் ஒவ்வொரு வருடமும் ஏற்றுமதி செய்யப்பட்ட பூக்களின் விபரம் இங்கு காணப்படுகிறது.

2010	❀ ❀ ❀ ❀ ❀ ❀
2009	❀ ❀ ❀ ❀
2008	❀ ❀ ❀ ❀ ❀
2007	❀ ❀ ❀
2006	❀ ❀ ❀ ❀

❀ = 300

www.ikeda.lk

1) 2007ல் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தப் பூக்கள் எத்தனை? .....

2) 2008 விட 2009ல் பூக்கள் ஏற்றுமதி எத்தனையால் குறைந்துள்ளது ? .....

3) 2006 ம், 2010 ம் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த பூக்களின் எண்ணிக்கை யாது ?

.....

4) அட்டவணைக்கேற்ப 2011ல் ஏற்றுமதி செய்யப்படும் பூக்களின் எண்ணிக்கை யாது ?

.....

5) அட்டவணைக்கேற்ப 2012ல் ஏற்றுமதி செய்யப்படும் பூக்களின் எண்ணிக்கை யாது ?

.....

⁂ பின்வரும் விபரங்களை/ கூற்றுக்களை வாசித்து இங்கு யாரைப் பற்றி கூறப்படுகிறது என்பதை புள்ளிக் கோட்டில் எழுதுக

1) நான் எனது எஜமான் மீது எப்போதும் மிக அன்பாக இருப்பேன். இரவு பகல் பாராது வீட்டைக் காப்பேன். திருடர்கள் தான் என் முதல் எதிரி என்னை எல்லோரும் நன்றி மிக்கவர் என அழைப்பர் நான் யார்?.....

2) என்னைக் கண்டால் பெரும் படையும் நடுங்கும். ஆனால் நான் அப்படி மோசமானவன் அல்ல. நான் வேண்டுமென்று யாரையும் தீண்டுவதில்லை. என்னை கற்கள் தடிகள் கொண்டு அடிப்பார்கள் நான் யார்?.....

3) நான் மனிதர்களின் விரோதியாவேன் அவர்களுக்கு பல தொல்லைகள் கொடுப்பேன். நோயையும் பரப்புவேன். அவர்களின் தூக்கத்தையும் கெடுப்பேன் நான் யார்?.....

4) நான் காட்டில் வாழ்வேன். தாவரங்களைச் சாப்பிடுவேன். இரவானால் சுற்றித் திரிவேன். சில நேரம் கிராமங்களுக்குச் சென்று அட்டகாசம் செய்வேன். மனிதர்கள் என்னைக் கண்டு பயப்படுவார்கள் நான் யார்?.....

5) நானும் மனிதர்களின் விரோதிதான் அவர்களுக்கு பல தொல்லைகள் கொடுப்பேன். நோயையும் பரப்புவேன். அவர்களின் உணவுகளின் மீது போய் இருப்பேன். நான் யார்?.....

6) நான் நிலத்தில் தான் தரித்திப்பேன். சில நேரம் வானம் மீது எழுவேன் அங்கே வட்டம் சுற்றுவேன். காடு மலை எல்லாவற்றையும் ஒரு நொடிப்பொழுதில் தாண்டிடுவேன். நான் யார்?.....

7) நான் உயிரினங்கள் மீது மிக அன்பாக இருக்கிறேன். ஏனெனில் நானும் ஓர் உயிர்தான். என்னை சிலர் கண்டபடி வெட்டி வீழ்த்துவார்கள். வேறு சிலர் என்னை பாதுகாப்பார்கள். நான் அவர்களுக்கு உண்ண உணவு கூட குறையாமல் வழங்கிடுவேன். நான் யார்?.....


www.ikedu.lk

8) நானும் உங்களைப் போல ஓர் உயிர்தான். நான் உங்களுக்கு சக்திமிக்க உணவாக முட்டையைத் தருகிறேன். ஆனால் நீங்களோ சாப்பிட்டு விட்டு மிஞ்சியதை தான் எனக்குத் தருகிறீர்கள். எங்களுடைய முட்டைகளையும் எடுத்துக் கொண்டு எங்களையும் உணவாகக் கொள்கின்றனர் நான் யார்?.....

9) எனக்கு அனுதினமும் பழங்களும் பருப்பும் கொடுக்கிறார்கள். என்னுடன் கொஞ்சி விளையாடுகிறார்கள். சிறகிருந்தும் என்னால் சுதந்திரமாகப் பறக்க முடியவில்லையே! எனனை அடைத்து வைத்திருக்கிறார்கள் இந்த கொடிய மனிதர்கள் நான் யார்?.....

10) என்னை என் வீட்டில் 'கோமாதா'என்று போற்றி வருகின்றனர். என் உறைவிடமும் நன்றாக உள்ளது. வேளை தவறாது பசும்புற்களைத் தருகின்றனர்.நானும் அதற்கு நன்றிக் கடனாகப் பாலைத் தருகின்றேன். நான் யார்?.....

⁂ பாடசாலை சேமிப்பு வங்கியில் தரம் 5 மாணவர்கள் சிலர் சேர்த்த பணத்தொகை இங்கு வரைபில் காட்டப்படுகிறது. அதனை அவதானித்து விடை தருக.



1) மே மாதத்தில் அனில் சேர்த்த பணம் எவ்வளவு?.....

2) அதனை வரைபில் நிழற்றிக் காட்டுக

3) ஜூன் மாதத்தில் சுனில் சேர்த்த பணம் எவ்வளவாக இருக்கும் ?.....

4) ரனில் எந்த மாதத்தில் ரூ.50 ஐ சேர்ப்பான்?.....

5) இந்த ஒழுங்கின் படி வருடத்தில் அனில் சேர்க்கும் மொத்தப் பணம் யாது?.....

6) ஜூலை மாதத்தில் மூவரும் சேர்க்கும் மொத்தப் பணம் யாது?.....

www.ikedu.lk


- கடையொன்றுக்கு ஐந்து நாட்களில் அனுப்பிய மரக்கறிகளின் விபரம் பின்வருமாறு

மரக்கறிகள்	1ம் நாள்	2ம் நாள்	3ம் நாள்	4ம் நாள்	5ம் நாள்
• கரட்	50 kg	40 kg	30 kg	20 kg	10 kg
• போஞ்சி	16 kg	24 kg	..... kg	40 kg	48 kg
• மிளகாய்	56 kg	61 kg	66 kg	71 kg	76 kg
• வெங்காயம்	12 kg	15 kg	18 kg	21 kg	24 kg

மேற்படி அட்டவணைக்கு ஏற்ப

1. 6ம் நாள் கடைக்கு அனுப்பப்படாமல் இருக்கும் மரக்கறி எதுவாக இருக்கலாம்?.....
2. 27 kg வெங்காயம் கடைக்கு அனுப்பப்படும் நாள் எதுவாகலாம்? .....
3. 7ம் நாள் எத்தனை kg மிளகாய் கடைக்கு அனுப்பப்பட்டிருக்கும்?.....
4. 1ம் நாளை விட 3ம் நாள் கடைக்கு இருமடங்கு போஞ்சி அனுப்பப்பட்ட தெனின் அதன் தொகை எவ்வளவாகும்?.....

⁂ தபாலகம் ஒன்றில் சென்ற மாதம் விற்பனை செய்யப்பட்ட முத்திரைகளின் விபரம் இங்கு காணப்படுகிறது. அதனை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.



இங்கு ஒரு ☐ 100 எனக் கொள்க.

1) 5 ரூபா முத்திரை விற்பனையால் கிடைத்த பணம் யாது ?.....

2) சம அளவில் விற்பனையான முத்திரை வகை இரண்டும் யாது ?.....

3) மிக அதிகமாக விற்பனையான முத்திரை வகை யாது ?.....

4) அடுத்த மாதம் இத்தபாலகத்திற்கு தேவைப் படாது என நீர் கருதும் முத்திரை வகை யாது ? .....

அன்பின் பெற்றோர்கள் அறிய,

உங்கள் சிறார்களுக்கு விடுமுறை காலத்தில் எவ்வாறான பயிற்சிகளை வழங்க வேண்டும் ,எப்போது வழங்க வேண்டும் போன்ற பிரச்சினைகளுக்கு ஒரு சிறிய தீர்வாக இந்த நுண்ணறிவுத் தொகுப்பினை பிரசுரித்துள்ளேன். இங்கு காணப்படும் பயிற்சிகளை ஒரு உதாரணமான பயிற்சியாகக்கருதி இதுபோன்ற பல வினாக்களை உருவாக்கி உங்கள் பிள்ளைகளுக்கு தினமும் ஒரு பயிற்சியாக குறிப்பிட்ட நேரத்தில் வழங்கி அவர்களின் புலமைப்பரிசில் பரீட்சைக்கான தயார்படுத்தலை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பமாக இந்த விடுமுறையை ஆக்கிக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த நுண்ணறிவுத் தொகுப்பினை யாரும் **வியாபார நோக்கத்திற்குப்** பயன்படுத்த வேண்டாம் என்றும் மிகவும் வினயமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

T.F.SHUHOOD.

ஆசிரிய ஆலோசகர்-

வலயக் கல்விப் பணிமனை - ஹம்பாந்தோட்டை.

❖தொலைபேசி இல

071-182-6-181 – 077-635-8-304 – 047-222-1-503

❖மின்னஞ்சல்

primaryisa@gmail.com

❖தொடர்புகளுக்கு

STUDY CENTRE

(The Centre for Primary Education)

48/1, BARRACK STREET,

HAMBANTOTA.

www.ikedu.lk